தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24312841.*

<u>வழக்கு எண்.7646/விசாரணை/09</u>

<u>விசாரணை நாள் 22.09..2009</u>

| | |
|---|---|
| முன்னிலை | முனைவர் (திரு) ஆர். பெருமாள்சாமி, எம்.ஏ.,எம்.பில்.,பி.எச்.டி., மாநில தகவல் ஆணையர் |
| மனுதாரர் | திரு. எம். பாஸ்கரன்<br>1/35ஏ, வேலாயுதம் காலணி 2வது தெரு<br>சாலிகிராமம்<br>சென்னை – 93. |
| பொது அதிகார அமைப்பு | பொதுத் தகவல் அலுவலர்<br>வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அலுவலகம்<br>எஸ். புதூர்<br>சிவகங்கை மாவட்டம். |

---

இவ்வாணையத்தில் இன்று (22.09.2009) நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு. எம். பாஸ்கரன் அவர்களும், பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர் திரு. சி. கருப்பையா, துணை வட்டார வளர்ச்சி அலுவலர், எஸ். புதூர் ஊராட்சி ஒன்றியம், சிவகங்கை மாவட்டம் அவர்களும் வந்திருந்தனர்.

தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 சட்டப்பிரிவு 6(1)ன் கீழ் மனுதாரர் 18.12.08 அன்று பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பிய மனுவில் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்ட குழும வீடுகள் சம்பந்தமாக 17 இனங்களுக்கு தகவல்கள் வழங்குமாறு கோரியிருந்தார். சட்டப்பிரிவு 7(1)ன்கீழ் 30 நாட்களுக்குள் தகவல் பெறாததால், மனுதாரர் சட்டப்பிரிவு 19(1)ன் கீழ் 10.02.09 அன்று முதல் மேல்முறையீடும், சட்டப்பிரிவு 19(3)ன் கீழ் 28.03.09 அன்று இவ்வாணையத்திற்கு இரண்டாவது மேல்முறையீடும் செய்ததன் அடிப்படையில் இவ்வழக்கு இன்றைய விசாரணைக்கு சட்டப்பிரிவு 18(3)ன் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இன்றைய விசாரணையின் போது பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் கோரிய 17 இனங்களுக்கும் 09.4.09 அன்று தகவல்கள் வழங்கியதாகத் தெரிவித்தார். ஆனால், தான் கோரிய 17 இனங்களில் வ.எண்.2,10,15, 16 மற்றும் 17 ஆகிவற்றிற்கு சரியான தகவல் வழங்கவில்லையென்று மனுதாரர் இவ்வாணையத்தின் முன் தெரிவித்தார். இவ்வாணையமும், மனுதாரர் கூறியது போல் மேலே கூறிய இனங்களுக்கு சரியான தகவல் வழங்கவில்லையென்று கருதுகிறது. எனவே, பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் கோரிய 17 இனங்களில் வ.எண்.2,10,15,16 மற்றும் 17க்கு அரசு ஆவணங்களில் உள்ளபடி முழுமையான, சரியான தகவலை மனுதாரருக்கு 30.9.09க்குள் வழங்கி, மனுதாரரின் கையொப்பம் பெற்ற நகலை இவ்வாணையத்திற்கு 09.10.09க்குள் அனுப்பி வைக்குமாறு உத்தரவிடப்படுகிறது.

பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் கோரிய 17 இனங்களுக்கு சட்டப்பிரிவு 7(1)ன் கீழ் 30 நாட்களுக்குள் தகவல் வழங்காததற்காக சட்டப்பிரிவு 20(1) மற்றும் 20(2)ஐ ஏன் பரிந்துரை செய்யக்கூடாது என்பதற்கான விளக்கத்தினை 23.10.2009க்குள் மாவட்ட ஆட்சியர், சிவகங்கை அவர்களின் மூலமாக இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்குமாறு உத்தரவிடப்படுகிறது.

தமிழ்நாடு தகவல் ஆணையம்.

ஒப்புதல் பெறப்பட்ட நாள் 01.10.2009
ஆணையத்தின் ஆணைப்படி.

உதவி பதிவாளர்.

<u>வழக்கு எண்.7646/09</u>
மாவட்ட ஆட்சித்தலைவர்
சிவகங்கை மாவட்டம்.

பொதுத் தகவல் அலுவலர்
வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அலுவலகம்
எஸ். புதுூர், சிவகங்கை மாவட்டம்.

திரு. எம். பாஸ்கரன்
1/35ஏ, வேலாயுதம் காலணி 2வது தெரு
சாலிக்கிராமம், சென்னை – 93.